**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 325/2024**
**வழக்கு சாட்சி PW- 14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சேணைமுத்து | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 23.07.2026.

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை –**

நான் தற்போது கடையம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.11.2019 ம் தேதி செங்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கூடுதல் பொறுப்பாக அச்சன்புதூர் வட்ட காவல் ஆய்வாளர் பொறுப்பில் இருந்தபோது இலத்தூர் காவல் நிலைய குற்ற எண். 268/2019 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அதே நாள் 16 மணிக்கு வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் முருகேசன், திருப்பதி ஆகியோர் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.13** ஆகும். வரைபடம் **அ.சா.ஆ.14** ஆகும்.

பின்னர் அன்றைய தினம் 16.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து இரத்தம்படாத சிமிண்ட் தரை கொஞ்சம், இரத்தம் பட்ட சிமிண்ட் தரை கொஞ்சம் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன், **அந்த அத்தாட்சி அசா.ஆ.15 ஆகும்.**

சாட்சிகள் முருகன், சுப்புலெட்சுமி, முத்துலெட்சுமணன், இருளப்பன், மணி, முருகேசன், திருப்பதி, முத்துக்கிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.11.2019ம் தேதி, 18.30 மணியளவில் வழக்கின் எதிரி முருகன் என்பவரை சிவராமபேட்டை பிள்ளையார்கோவில் பக்கம் வைத்து கைது செய்து, சாட்சிகள் மாரியப்பன், மோகன் ஆகியோர் முன்னிலையில் விசாரித்த போது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காயம்பட்ட நபரை வெட்டிய அருவாளை ஒரு இடத்தில் செடி புதருக்குள் வீசிவிட்டு, எதிரே உள்ள ஒரு புதருக்குள் மறைத்துவிட்டேன். பின்பு கேரளா சென்று தலைமறைவாக நின்று கொண்டிருந்தபோது, பிடித்துள்ளீர்கள் என்னை கூட்டி சென்றால் நான் ரேவதியை வெட்ட பயன்படுத்திய அருவாளை புதருக்குள் வீசிய இடத்தில் தங்களுக்கு அடையாளம் காட்டுகிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.16** ஆகும். பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 19.45 மணிக்கு கொடிக்குறிச்சி பஸ்ஸ்டாப்பிற்கு கீழ்புறம் செடி புதருக்குள் எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த கொக்கி உள்ள கொம்பு கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.17** ஆகும். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட அருவாளை நீதிமன்றத்திற்கு படிவம் 91ன் மூலம் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.18** ஆகும். சாட்சிகள் மோகன், மாரியப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சம்பவ இடத்தில் அத்தாட்சி கைப்பற்றிய இரத்தம்படாத சிமிண்ட் தரை கொஞ்சம்,

இரத்தம் பட்ட சிமிண்ட் தரை கொஞ்சம் ஆகியவற்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ 19 ஆகும். இரத்தம்படாத சிமிண்ட் தரை கொஞ்சம் அ.சா.பொ.2, இரத்தம் பட்ட சிமிண்ட் தரை கொஞ்சம் அ.சா.பொ.3 ஆகும். அத்துடன் எனது முதல் விசாரணை முடித்து அச்சம்புதுார் வட்ட காவல் ஆய்வாளர் பொறுப்புபோற்றுக்கொண்டதால் வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பில் ஒப்படைத்தேன்.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.24 16:00:07 +0530